

# ஓரினச்சேர்க்கையாளர்கள் மற்றும் பிற பாலின அடையாளங்களைக் கொண்டுள்ள மற்ற சமூகங்களினைப் பற்றி ஊடக அறிக்கையிடல் மற்றும் ஊடக நெறிமுறைகள் தொடர்பான வழிகாட்டி


தொகுப்பு துஷார மனோஜ்



EQUAL GROUND அமைப்பின் ஒரு வெளியீடு.

# முன்னுரை

இலங்கையின் LGBTIQ சமுதாயத்தின், அதாவது ஆண் ஓரினச்சேர்க்கையாளர்கள், பெண் ஓரினச்சேர்க்கையாளர்கள், இரு பால்சேர்க்கையாளர்கள், மாற்றுப் பால் இனத்தவர், குறுக்குப்பால் இனத்தவர், புதுமையர்கள் ஆகியோரின் மனித உரிமைகளை மேம்படுத்துவதனையும், பாதுகாப்பதனையும் நோக்கமாக கொண்டுள்ள "ஈக்வல் கிரௌண்ட்" அமைப்பின் ஒரு பிரசுரமாக இந்த புத்தகம் உங்களிடம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஈக்வல் கிரௌண்ட் அமைப்பானது பல்வேறு பாலின அடையாளங்களைக் கொண்டுள்ள சமூகத்தின் அரசியல், கலாச்சார, சமூக மற்றும் சட்ட உரிமைகளை மேம்படுத்தச் செயற்படுவதுடன் அத்தகைய சமூகங்களுக்கு அவசியமான அறிவுரைகளை வழங்குதல், விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் பட்டறைகளை நடத்துதல், தங்குமிடம் மையமொன்றினைப் பராமரித்தல், ஒரு புலமைப்பரிசில் நிதியத்தைப் பராமரித்தல், வேறு நலன்புரி நடவடிக்கைகளில் ஈடுபடல் மற்றும் இச் சமூகம் சார்பாக அரசாங்க, தனியார் துறை போன்ற பல்வேறு பங்குதாரர்களுடனான மத்தியஸ்தராக தொழிலாற்றல் போன்ற பல நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. மேலும், ஈக்வல் கிரௌண்ட் அமைப்பானது மாநாடுகள், பட்டறைகள், பயிற்சிகள் போன்ற பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச அரங்குகளில் வெவ்வேறு பாலின அடையாளம் கொண்ட சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, அவர்களுக்கு சார்பாக தேவையான மத்தியஸ்தத்தையும் வழங்குகிறது.

சமூகத்தில் வேறுபட்ட பாலின அடையாளங்களைக் கொண்டவர்களுக்காக, சமுதாயம் அவர்களின் மீது கொண்டுள்ள மனப்பான்மை அல்லது கருத்துக்களை மாற்றுவதன் மூலம் ஒரு திறந்த சமூக ஒழுங்கை அமைப்பதனை நோக்காகக் கொண்டு இலங்கையின் 13 மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஈக்வல் கிரௌண்ட் அமைப்பு நடைமுறைப்படுத்தியுள்ளது. அத்தகைய நிகழ்ச்சிகளின் மூலம் இலங்கைப் போலீஸ், இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டத்தரணிகள், சட்ட உதவி ஆணையம், ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர்கள், கிராம நிலதாரி அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், கிராமப்புறங்களில் உள்ள இளைஞர் சங்கங்கள், சுகாதார அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் வெவ்வேறு பாலின அடையாளங்களைக் கொண்ட சமூகத்தைப் பற்றி அறிந்துள்ளனர். இத்தகைய முயற்சிகளின் விளைவாக, 2004 ஆம் ஆண்டில் ஈக்வல் கிரௌண்ட் அமைப்பு நிறுவப்பட்டகாலத்தில் காணப்பட்ட நிலைக்கு மாற்றமாக சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் பல்வேறுபட்ட பாலின அடையாளங்களுடனான சமூகத்தில் இடம்பெற்று வருகின்றன. இருப்பினும், பல்வேறு அடிப்படைவாதக் குழுக்களால் வெளியிடப்பட்ட மற்றும் பிரசுரிக்கப்பட்ட இழிந்த மற்றும் அடிப்படையற்ற அறிக்கையின் காரணமாக, பல்வேறு பாலின அடையாளங்களுடனான சமூகத்திற்கு எதிராக வன்முறை அதிகரித்து வருவதை நாங்கள் கவனிக்கிறோம். வெகுஜன ஊடகங்களும் இதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. ஆண் ஓரினச்சேர்க்கையா-ளர்கள், பெண் ஓரினச்சேர்க்கையாளர்கள், இரு பால்சேர்க்கையாளர்கள், மாற்றுப் பால் இனத்தவர், குறுக்குப்பால் இனத்தவர், புதுமையர்கள் பற்றி இலங்கையில் சமீப காலத்தில் வெளியிடப்பட்ட செய்தி அறிக்கைகளை நாம் அவதானித்ததில், இந்த செய்தி அறிக்கைகளில் பெரும்பாலானவை கற்பனையான - நன்கு ஆராயப்படாமலும் அல்லது விசாரணை செய்யப்படாத கருத்துக்களை கொண்டிருக்கின்றன என்பதை நாம் இனங்கண்டோம். தனிப்பட்ட சமூக மற்றும் கலாச்சார கருத்துக்களை உள்ளடக்கி மற்றும் உள்ளுணர்வு, உணர்திறன் இல்லாமல், ஊடக நெறிமுறைகள் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல், அத்தகைய பொறுப்பற்ற ரீதியில் செய்தி அறிக்கையிடல் ஆண் ஓரினச்சேர்க்கையாளர்கள், பெண் ஓரினச்சேர்க்கையாளர்கள், இரு பால்சேர்க்கையாளர்கள், மாற்றுப் பால் இனத்தவர், குறுக்குப்பால் இனத்தவர், புதுமையர்கள் ஆகிய நபர்களுக்கு எதிராக வன்முறை அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகும்.

ஒருபுறம், இந்த கையேட்டை வடிவமைப்பதற்கான பின்னணி தரவு பூர்வமாக உண்மையான செய்தியினை அறிக்கையிட ஊடகத்திற்கு தேவையான வழிகாட்டுதலை வழங்குவதாகும், மறுபுறத்தில், இத்தகைய ஊடகங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு உணர்திறன் கொண்டு செயற்படுவதனை ஏற்படுத்துவது ஆகும். இந்த கையேட்டைப் பயன்படுத்தி, நீங்கள் உங்கள் ஊடகவியல் மற்றும் பத்திரிகைத் திறனைப் பயன்படுத்தி, வெவ்வேறு பாலின அடையாளங்களுடனான சமூகத்தைப் பற்றி சாதகமான மற்றும் ஆக்கப்பூர்வமாக கையாள்வீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஆண் ஓரினச்சேர்க்கையாளர்கள், பெண் ஓரினச்சேர்க்கையாளர்கள், இரு பால்சேர்க்கையாளர்கள், மாற்றுப் பால் இனத்தவர், குறுக்குப்பால் இனத்தவர், புதுமையர்கள்பே-ான்றோர் பற்றி ஊடகங்களில் அறிக்கையிடுகையில் பயன்பத்தப்பட வேண்டிய சரியான சொற் பதங்களை உள்ளடக்கிய அருஞ்சொற் பொருள் பட்டியலினை நாம் உள்ளடக்கியுள்ளோம். அத்துடன் பாலியல் மற்றும் பாலினம் அடையாளம் என்றால் என்ன, ஒருவருக்கொருவர் பாலியல் மற்றும் பாலியல் சார்பு எப்படி வேறுபடுகிறது என்பன சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளதுடன். மேலும் ஊடக நெறிமுறைகள் மற்றும் மனித உரிமைகள் மீது ஊடகங்கள் ஏன் கவனம் செலுத்த வேண்டும் என்பதைப் பற்றி கலந்துரையாடும் ஒரு அத்தியாயத்தை சமீப காலங்களில் செய்தி அறிக்கையிலிருந்து சில எடுத்துக்காட்டுகளை மேற்கோளிட்டுள நாம் சேர்த்துள்ளோம். முடிவில், வெவ்வேறு பாலின அடையாளம் கொண்ட சமூகம் பற்றி எழுத்து, அறிக்கை அல்லது வேறு எந்த கலை அல்லது வடிவமைப்பில் வெளியீடுகள் மேற்கொள்ளப்படினும் சரியாக மற்றும் உண்மையினைப் பேண தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும் என்று நாங்கள் நினைக்கும் தொடர் வழிமுறைகளையும் சேர்த்துள்ளோம்.

# சொற்களஞ்சியம்

இது GLAAD ஊடகம் மற்றும் குறிப்புக் கையேட்டினைத் (www.glaad.org/reference) - GLAAD Media and Reference Guidebook- தழுவிய இலங்கைச் சூழலுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டதாகும்.

பாலியல் நாட்டம் (Sexual Orientation)

இது ஒரு நபரின் ஒரே பாலினத்தின் அல்லது எதிர் பாலினத்தின் மற்றொரு நபர் மீது உடல், உளவியல் மற்றும் காதல் ஈர்ப்பினைக் கொண்டிருப்பதனைக் குறிக்கும் சரியான அறிவியல் ரீதியான சொற்பதமாகும். ஓரின சேர்க்கை ஆண்கள், ஓரின சேர்க்கை பெண்கள், இருபால் சேர்க்கையாளர்களான பெண்கள் மற்றும் ஆண்கள் மற்றும் எதிர்ப்பால் ஈர்ப்பினர் இதில் அடங்குவர்.

பாலியல் நாட்டத்திற்கு பதிலாக பாலியல் ஆசை/தேர்வு/சார்பு போன்ற தவறான சொற்கள் அறிக்கையிடலில் அல்லது வெளியீடுகளில் பயன்படுத்தப்படல் மறைமுகமாக, ஓரினச்சேர்க்கையாளர் அல்லது இரு பால்சேர்க்கையாளர்கள் அவர்களின் அத்தகைய நிலை குணப்படுத்தக்கூடிய ஒரு நிலையாகும் என்ற பொருளை கொடுக்கக் கூடியது. மக்கள் தங்களுடைய சொந்த பாலியல் நாட்டத்தை அறிந்து கொள்வதற்கு எத்தகைய பாலியல் அநுபவங்களையும் கொண்டிருக்கத் தேவை இல்லை. அது அவர்கள் யாரை விரும்புகின்றனர் என்பதை கவனிப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

எதிர்ப்பால் ஈர்ப்பினர் (Heterosexual)

உடல், உளவியல் மற்றும் உணர்ச்சி மிக்க ஈர்ப்பை எதிர்ப் பால் இனத்தில் நேரடியாகச் செலுத்தும் மக்களை குறிப்பிட உபயோகிக்கும் குறிப்பிட்ட சொற்பதம் ஆகும்

ஓர்பால் ஈர்பினர்/ஓரினச்சேர்க்கையாளர் - “ஹோமோ செக்சுவல்” (Homosexual)

தன் பால் இனத்தோருடனான பாலியல் உறவு கொள்ளும் நபர்களை விலக்கி வெறுப்பு தெரிவிக்க பயன்டுத்தப்பட்ட வழக்கற்றுப் போனவசை மொழியாகும். பல சர்வதேச ஊடக நிலையங்கள் இந்த வார்த்தையின் பயன்பாட்டை மட்டுப்படுத்தியுள்ளன. தன் பால் இனத்தோருக்கு கவரப்பட்டுள்ள/ஈர்க்கப்பட்டுள்ள நபர்களைக் குறிக்க உபயோகிக்கும் குறிப்பிட்ட சொற்பதம் ஆகும்

ஆண் ஓரினச்சேர்க்கையாளர் (Gay)

ஒரு ஆண் மற்றொரு ஆண் மீது உடல், உளவியல் மற்றும் உணர்ச்சி ரீதியான ஈர்ப்பை குறிப்பிட்ட காலத்திற்கு கொண்டிருப்பதனை குறிக்கும் ஒரு குறிப்பிட்ட சொல். "ஹோமோ செக்சுவல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி ஆண் ஓரினச்சேர்க்கைகளை விவரிப்பதை நிறுத்துங்கள், இது ஒரு தவறான அர்த்தத்தை தூண்டுகிற காலாவதியான, வசைச் சொல்லாக கருதப்படுகிறது.

பெண் ஓரினச்சேர்க்கையாளர் (Lesbian)

ஒரு பெண் மற்றொரு பெண் மீது உடல், உளவியல் மற்றும் உணர்ச்சி ரீதியான ஈர்ப்பை குறிப்பிட்ட காலத்திற்கு கொண்டிருப்பதனை குறிக்கும் சொல் ஆகும். "ஹோமோ செக்சுவல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி ஆண் ஓரினச்சேர்க்கைகளை விவரிப்பதை நிறுத்துங்கள், இது ஒரு தவறான அர்த்தத்தை தூண்டுகிற காலாவதியான, வசைச் சொல்லாக கருதப்படுகிறது.

இரு பால்சேர்க்கையாளர்கள் (Bisexual) - இரு பால்சேர்க்கை ஆண்கள் மற்றும் பெண்கள்

தன் உடல், உளவியல் மற்றும் உணர்ச்சி மிக்க ஈர்ப்புக்களை தனது ஒத்த பால்நிலை கொண்டவரிடமோ அல்லது எதிர்ப் பால் நிலை கொண்டவரிடமோ வெளிப்படுத்தக் கூடிய கொள்ளளவு உடைய நபர்களைக் குறிப்பிட பயன்படுத்தும் சொல் ஆகும். மக்கள் இந்த ஈர்ப்பை பல் வேறு வழிகளில் மற்றும் கோணங்களில் தம் வாழ்வில் அநுபவித்து இருக்கக் கூடும். இரு பால் உறவாளர்கள் அவ் வண்ணம் இருப்பதற்கு விசேட பாலியல் அனுபவங்களைக் கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை. அவர்கள் தம்மை இரு பால்சேர்க்கையாளர்களாக அடையாளம் காண எவ்வித பாலியல் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை.

# சொற்களஞ்சியம்

பால் (Sexuality)

இது மக்களை ஆண் அல்லது பெண் எனப் பிரிக்கும் ஒரு வகைப்படுத்தல் ஆகும். பிறந்த குழந்தைகள், அவர்களின் வெளியக உடல் கூற்றின் தோற்றப்பாட்டின் அடிப்படையில் பொதுவாக பால் அடையாளப்படுத்தப்படுகின்றது. (இதுவே பிறப்புச் சான்றிதழில் எழுதப் படுகின்றது) எவ்வாறாயினும், ஒரு நபரின் பால் ஆனது, உண்மையில், குரோமோசோம்கள், ஹோர்மோன்கள், உள்ளக மற்றும் வெளியக இனப் பெருக்க உறுப்புகள் மற்றும் இரண்டாம் நிலை பால் தன்மைகள் உள்ளிட்ட உடன் தன்மைகளின் கூட்டிணைப்பே ஆகும்.

பால் நிலை அடையாளம்/பாலின அடையாளம் (Gender Identity)

இது பிறப்பு மூலம் ஒரு நபர் பெறும் பாலிலிருந்து வேறுபட்டது. இது ஒருவர் தனது மனதில், பிறப்பிற்கு மாறாக தன் பாலை எவ்வாறு உள ரீதியாக உணர்ந்து நோக்கிறாரோ அதுவே அவரின் பாலாக கருதுவதை குறிக்கும். ஒரு ஆண் அல்லது பெண் மனோதத்துவ ரீதியாகவும் அதற்கேற்ப செயல்படுவது அல்லது அதைப் புரிந்துகொள்வது பற்றி தொடர்புடையது. இது ஒரு நபரின் பாலின உணர்வுடன் ஆழமாக தொடர்புபட்டது.

பால் நிலை வெளிப்பாடு (Gender Expression)

பால் நிலையின் வெளியக விபரிப்புகள், ஒருவரின் பெயர், சுட்டுப் பெயர்கள், ஆடைகள், தலைமுடி, நடத்தை, குரல், அல்லது உடல் தன்மைகள் ஆகியவற்றுக்கு ஊடாக வெளிப்படுத்தலை இது குறிக்கும். இவற்றை சமூகம் ஆண் தன்மை மற்றும் பெண் தன்மை என அடையாளப் படுத்திக் கொள்ளும். எவ்வாறெனினும் கருதப்பட்ட ஆண் தன்மை மற்றும் பெண் தன்மை ஆகியவை காலத்திற்கு காலமும் பண்பாட்டிற்குப் பண்பாடும் ஏற்ப மாற்றம் அடையும். எடுத்துக் காட்டாக மாற்றுப் பால் இன மக்கள், பிறப்பின் பொது அளிக்கப்பட்ட பாலிற்கு மாற்றமாக அவர்களது பால் நிலை வெளிப்பாட்டை அவர்கள் தம் பால் நிலை அடையாளத்துடன் ஆக்குவதற்கு முற்படுகின்றமை.

மாற்றுப் பால் இனத்தவர் (Transgender)

இது பிறப்பின் போது காணப்படும் பாலிற்கு மாற்றமாக வேறு பாலின அடையாளம் மற்றும் / அல்லது பாலின வெளிப்பாடு கொண்ட, பாலினத்திலிருந்து வேறுபட்ட குணநலன்களைக் காட்டும் நபர்களின் பரந்த விளக்கத்தை உள்ளடக்கிய சொற்பதம் ஆகும். இது ஒரு நபர் அவரின் பிறப்பு பாலிற்கு எதிரான உணர்வுகளுடன் தான் மற்றைய பாலிற்கு உரித்தானவர் எனும் சிந்தனையை உடையோரைக் குறிக்கும். மேலும், அவர்கள் எதிர் பாலினுடைய நபர்களாக தங்களை அடையாளம் காண்பர். இதற்கான உயிரியல் ரீதியான காரணம், அந்த நபரின் மனம் பாலியல் உறுப்புகளுடன் இணங்காது, அதற்கு பதிலாக எதிர் பாலினத்தைச் சார்ந்த மனதின் செயற்பாட்டை கொண்டிருப்பதைக் குறிக்கும்

மாற்றுப் பால் இனக் குடையின் கீழ் உள்ள மக்கள் தங்களை ஒன்று அல்லது பல வேறுபட்ட சொற்கள் – மாற்றுப் பால் இனத்தவர் அடங்கலாக - கொண்டு சித்தரிப்பர். இவற்றுள் சில கீழ் தரப்பட்டு உள்ளன. ஒவ்வொரு தனி நபரும் முன்னுரிமை அளிக்கும், சித்தரிக்கும் சொல்லை உபயோகியுங்கள். பல மாற்றுப் பால் இன மக்கள் தத் தம் மருத்துவர்களால் அவர்களது உடலினை மாற்றுவதற்காக ஹோர்மோன்களை பரிந்துரை செய்யப் படுகின்றனர். சிலர் சத்திர சிகிச்சைக்கும் தம்மை ஆட் படுத்துகின்றனர். ஆனால் அனைத்து மாற்றுப் பாலின மக்களும் இவற்றை செய்யக் கூடியவாறு உள்ளது அல்லது இந்தப் படிமுறைகளை மேற்கொள்வர் என்று கூற முடியாது. அத்துடன் மாற்றுப் பாலின அடையாளம் ஆனது மருத்துவ விதி முறைகளில் தங்கியிருப்பதில்லை.

திருநர் (Transsexual)

இது மருத்துவ மற்றும் உளவியல் சமூகங்களில் இருந்து எழுந்த ஒரு பழையான சொல் ஆகும். நிரந்தரமாக மாறிய அல்லது மருத்துவ சிகிச்சைகள் மூலம் மாற்றத்தை விரும்புகிற (ஹோர்மோன்கள் மற்றும்/அல்லது சத்திர சிகிச்சைகள் உள்ளடங்கலாக) மக்களை குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. மாற்றுப் பாலினம், மாற்றுப் பாலியல் போன்றதல்லாமல் இது ஒரு குடைக்குள் கொண்டு

வரும் சொல் அல்ல. பல மாற்றுப் பாலின மக்கள் தம்மை மாற்றுப் பாலியல் என அடையாளப் படுத்துவது இல்லை. எது சிறந்தது என்று பார்த்தால், ஒவ்வொரு தனி நபரையும் எச் சொல்லுக்கு முன்னுரிமை வழங்க விரும்புகின்றீர்கள் என்று கேட்பதுதான். அவ்வாறு முன்னுரிமை வழங்க விரும்பின் இதை ஒரு அடைமொழியாக பாவிக்கலாம்: மாற்றுப் பால் பெண் அல்லது மாற்றுப் பால் ஆண்.

மாற்று (Trans)

சுருக்கெழுத்தின் போது மாற்றுப் பால் இனம் அல்லது மாற்றுப் பாலியல் ஆகியவற்றின் பொருள் பட பாவிக்கப்படுகின்றது. அல்லது சில வேளைகளில் மாற்றுப் பாலின குடையின் கீழ், பல வகையான அடையாளங்களை இது உள்ளடக்குகின்றது. ஏனெனில், இதன் பொருளானது துல்லியமாகவோ பரந்ததாகவோ விளங்கிக் கொள்ளப்படவில்லை. இது எதைக் குறிக்கின்றது என்பதை விளங்கிக் கொள்ளாத சபையோர் உள்ள இடத்தில் இதனை பாவிக்கையில் கவனமாக இருக்க வேண்டும். நேர-டியான அர்த்தத்தில் சொல்லப்படாதவிடத்து தவிர்ப்பது நலம். அல்லது தெளிவாக இச் சொல்லின் பொருளை விளக்கமளிக்க கூடிய இடங்களில் உங்கள் உரையில் பாவிக்கலாம்.

மாற்றுப்பால் ஆண் / திருநம்பி (Transgender Man)

பிறப்பின் போது பெண்ணாக அடையாளப் படுத்தப் பட்டு பின்னர் ஆண் ஆக வாழ்கின்றவர் தம்மை அடையாளப்படுத்த இச் சொல்லை பாவிக்கலாம். அவர்கள் இதனை சுருக்கி ட்ரான்ஸ் ஆண் என்றும் குறிப்பிடுவர். சிலர் “கு வழ ஆ”. என்பதனை பாவிப்பர். இது பெண்ணில் இருந்து ஆண் ஆனவர் என்பதை குறிக்கும். சிலர் எவ்வித திருத்தங்களுக்குள்ளும் அகப்படாது ஆண் என அழைக்கப்பட விரும்புவர். ஒவ்வொரு தனி நபரும் எவ்வாறு அழைக்கப் பட விரும்புகிறார் என்பதை அவர்களிடமே கேட்பது நலம்.

மாற்றுப்பால் பெண் / திருநங்கை (Transgnder Woman)

பிறப்பின் போது ஆணாக அடையாளப் படுத்தப் பட்டு பின்னர் பெண் ஆக வாழ்கின்றவர் தம்மை அடையாளப்படுத்த இச் சொல்லை பாவிக்கலாம். அவர்கள் இதனை சுருக்கி ட்ரான்ஸ் பெண் என்றும் குறிப்பிடுவர். சிலர் “ஆ வழ கு” என்பதனை பாவிப்பர். இது ஆணில் இருந்து பெண் ஆனவர் என்பதை குறிக்கும். சிலர் எவ்வித திருத்தங்களுக்குள்ளும் அகப்படாது பெண் என அழைக்கப்பட விரும்புவர். ஒவ்வொரு தனி நபரும் எவ்வாறு அழைக்கப் பட விரும்புகிறார் என்பதை அவர்களிடமே கேட்பது நலம்.

பிறர்பால் உடையணியும் திருநர் (Cross Dresser)

வேற்றுப் பால் இன உடை அணிபவர் என்னும் சொல் வேறுபட்ட பால் இனத்தை உடையவருக்கு சம்பந்தமான உடைகளை அணிபவரை குறிக்கும். உண்மையில் எதிர்ப் பால் இனத்தாரோடு உறவு கொள்ளும் ஆண்கள், பெண்களுக்கு சம்பந்தமான ஆடைகள், முக ஒப்பனை, கலாசார அணிகல-ன்ககள் அணியின் அவர்களை இச் சொல் பொருத்தமாக குறிக்கும். இந்த நடவடிக்கையானது பால் நிலை வெளிப்பாட்டின் ஒரு வடிவம் ஆகும். அத்துடன் இது பொழுது போக்கிற்காக செய்யப்படுவ-தில்லை. வேற்றுப் பால் இன உடை அணிபவர் தமது பாலினத்தை நிரந்தரமாக மாற்றிக் கொள்ள விரும்ப மாட்டார் அல்லது முழு நேர பெண்ணாக இருக்க விரும்ப மாட்டார்.

எல். ஜி. பி. டி. ஐ. க்யூ / பெ. ஆ. இ. மா. அ. கே (LGBTIQ)

”தன் பால் இனத்தாரோடு உறவு கொள்ளும் பெண், தன் பால் இனத்தாரோடு உறவு கொள்ளும் ஆண், இரு பால் இனத்தாரோடும் உறவு கொள்பவர், மாற்றுப் பாலினத்தவர், உள்ளான உடலுறவு மற்றும் கேள்விக்குட்படுத்தல்” என்பதன் சுருக்கமான எல். ஜி. பி. டி. ஐ. க்யூ. என்பது அடிக்கடி பாவிக்கப்படுகி-ன்றது. ஏனெனில் இது சமூகத்தின் பல்வகைமையை அதிகமாக உள்ளடக்குகின்றது. சபையோர்கள் இதன் பாவனையால் குழப்பம் அடையாத வகையில் இப் பதம் பாவிக்கப்பட்ட வேண்டும். முதற் பாவனையில் இதன் பொருளை எடுத்துக் கூறுவது உகந்தது. மேலும், இது ஒரு பிரதிபலிப்பாகவும் பயன்படுத்தப்படுகிறது, ஏனெனில் இது பல்வேறு பாலியல் அடையாளங்களை உள்ளடக்கிய சமூகத்தை விவரிப்பதற்கும் அவர்களது மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் பொதுவாக பயன்படுத்தப்படும்

# சொற்களஞ்சியம்

விந்தை / புதுமையர் (Queer)

வேறுபாடு அல்லது வித்தியாசப்பட்டிருப்பதை தரக்குறைவானதாக குறிக்க பயன்படுத்தப்பட்ட மரபு ரீதியான சொல் ஆகும். முன்னர் சில LGBTIQ மக்கள் தம்மை இதைப் பயன்படுத்தி அழைத்தனர். எவ்வாறெனினும், இது உலகளாவிய ரீதியிலும் LGBTIQ சமூக ரீதியில் கூட வழக்கமாக பயன்படுத்தப்படுவது இல்லை. அதனால் யாராவது இச் சொல்லைப் பயன்படுத்தி தம்மை அழைத்தால் அல்லது நேரடியாக குறித்தால் அன்றி இச் சொல்லை பயன்படுத்தலை தவிர்த்தல் நலம். LGBT இன் இறுதியில் ஞ காணாப்படின், அது விந்தை அல்லது கேள்விக்கு உட்படுத்தல் என்கின்ற பொருளை தரும்.

சிஸ்ஜெண்டர் / பொதுப் பாலினம் (Sis Gender)

மாற்றுப் பாலினத்தவர் அல்லாதோரால் தம்மை அழைத்துக் கொள்ள இச்சொல் பாவிக்கப்படுகிறது. “சிஸ்” என்பது லத்தீன் மொழியில் ஆனது. அது “ஒத்த பக்கத்தில் உள்ளது” என்ற பொருள் தருவது ஆகும். அது ட்ரான்ஸ் என்பதற்கான எதிர்ப் பதம் ஆகும். மாற்றுப் பாலினத்தவர்கள் அல்லாத மக்களை அடையாளப்படுத்த சிறந்த வழி என்ன என்றால் எளிதாக அவர்களை மாற்றுப்பாலினத்தவர்கள் அல்லாதவர் என்று கூறுவதே ஆகும்.

பால்நிலையை உறுதி செய்யாமை (Gender Non Confirming)

இச் சொல் ஆனது ஆண் தன்மை மற்றும் பெண் தன்மை ஆகிய இரண்டை விட்டும் வேறான பால் வெளிப்பாடு உடைய சில மக்களை சித்தரிக்க பாவிக்கப் படுவது ஆகும். நீங்கள் குறித்துக் கொள்ள வேண்டியது என்ன என்றால் அனைத்து உறுதி செய்யாத மக்களும் மாற்றுப் பாலினத்தவர் அல்ல. அனைத்து மாற்றுப் பால் இனத்தவர்களும் உறுதி செய்யாதவர்கள் அல்ல. பெரும்பாலான மக்கள் வழமைக்கு முற்றிலும் மாற்றம் அல்லாத பாலியல் வெளிப்பாட்டை கொண்டிருப்பர். - அது மட்டும் அவர்களை மாற்றுப் பாலினத்தவர்கள் ஆக்கி விடாது. பல மாற்றுப் பாலின ஆண் மற்றும் பெண்கள் ஆண் தன்மை பெண் தன்மை என்னும் பாலின வெளிப்பாட்டை கொண்டிருப்பர். மாற்றுப்பாலினத்தவராக இருத்தலானது பால் நிலை உறுதி செய்யாமல் இருத்தல் ஆகாது. இச் சொல்லானது மாற்றுப்பால் அல்லது மாற்றுப்பாலியல் ஆகியவற்றுக்கான ஒத்த சொல் அல்ல. அத்துடன் யாரேனும் பால் நிலை உறுதி செய்யாமையை தமது அடையாளமாக கருதின் மட்டுமே இச் சொல் அவர்களை சித்தரிக்க உபயோகிக்கப் படலாம்.

விந்தையான பால்நிலை / பால் புதுமையர் (Gender Queer)

இந்த சொல்லானது, பால்நிலை அடையாளம் மற்றும் / அல்லது பால் நிலை வெளிப்பாடு ஆகியவை ஆண் என்பதற்கு உள்ளோ பெண் என்பதற்கு உள்ளோ சேராதவிடத்து, உபயோகிக்கப்படும். அவர்கள் தமது பால் நிலையை ஆணுக்கும் பெண்ணுக்கும் இடைப்பட்ட ஏதோ ஒரு இடத்தில் வரியறுப்பர். அல்லது இந்த சொற்களை விட்டு முற்றிலும் வேறான சொற்களால் சித்தரிப்பர். இச் சொல்லானது மாற்றுப்பால் அல்லது மாற்றுப்பாலியல் ஆகியவற்றுக்கான ஒத்த சொல் அல்ல. அத்துடன் யாரேனும் விந்தையான பால் நிலையை தமது அடையாளமாக கருதின் மட்டுமே இச் சொல் அவர்களை சித்தரிக்க உபயோகிக்கப் படலாம். இது வழக்கத்திற்கு மாறான நடவடிக்கையாக இருக்கலாம் அல்லது நெறிமுறைகள் / மாநாடுகளுக்கு எதிராக ஒரு அரசியல் பின்னடைவாக இருக்கலாம்.

ஹோமோ / போபியா / ஓரினச்சேர்க்கையாளர் மீதான வெறுப்பு (Homophobia)

இது ஓரினச்சேர்க்கையாளர்களுக்கு எதிரான பயம். சகிப்புத்தன்மை அற்றிருத்தல் மற்றும்வெறுப்பை குறைப்பதுடன் டுபுடீவு நபர்களுக்கெதிரான வெறுப்பினையும் சித்தரிக்கிறது.

பை / போபியா / ஈர்பாலீர்பின வெறுப்பு (Biphobia)

இரு பால்சேர்க்கையாளர்கள் சார்பான அச்சம் இவ்வாறழைக்கப்படும். இது பொதுப்படுத்தல், துரோக இணைவுகள், ஒழுக்கமின்மை மற்றும் பாலியல் நோய்கள் கடத்தப்படல் ஆகியவற்றை மையமாகக் கொண்டது. சகிப்புத்தன்மை அற்றிருத்தல் அல்லது முன்முடிவு ஆனது இவ்வகை மக்களின் வெறுப்பை செம்மையாக சித்தரிக்க வல்லது.

# சொற்களஞ்சியம்

வெளி வரல் (Coming Out)

இது சுய ஏற்றுக் கொள்ளலின் மூலம் தனது வாழ்நாள் முழுதுமான தம்மை ஏற்றுக் கொள்ளும் செயன்முறை ஆகும். சிலர், தன் பால் இனத்தாரோடு உறவு கொள்ளும் பெண், தன் பால் இனத்தாரோடு உறவு கொள்ளும் ஆண், இரு பால் இனத்தாரோடு உறவு கொள்பவர் அல்லது மாற்றுப் பாலினத்தார் என்றவாறு தன்னைத் தானே அடையாளப்படுத்தி பின்னர் அடுத்தவர்களுக்கு வெளிப்படுத்-துவர். ஒருவரின் அடையாளத்தை பொதுவில் பகிர்தல் ஆனது வெளிவரலின் பகுதியாக இருக்கலாம், இல்லாதும் போகலாம்.

வெளி (Out)

பொது மற்றும் / அல்லது தொழில் வாழ்க்கையில் ஒரு நபர் தனதுஅடையாளத்தை வெளிப்படையாக வெளிப்படுத்துதலைக் குறிக்கும்

உதாரணம் - பொப் பாடல் நட்சத்திரமான ரிக்கி மார்ட்டின் வெளிவந்துள்ளார். அவர் வெளிப்படையாக ஓர் ஆண் ஓரினச்செரிக்கையாளர் என அழைக்கப்படலாம்.

வெளிப்படையான ஓரினச்சேர்க்கையாளர் (Openly Gay)

இது தன் பால் இனத்தாரோடு உறவு கொள்ளும் ஆண் என, தம் தனிப்பட்ட, பொது மற்றும் / அல்லது தொழில் வாழ்வில் தம்மை சுய அடையாளப் படுத்தி கொள்வதை குறிக்கிறது. அத்துடன் வெளிப்படையான தன் பால் இனத்தாரோடு உறவு கொள்ளும் பெண், வெளிப்படையான இரு பாலினத்தாரோடும் உறவு கொள்பவர், வெளிப்படையான மாற்றுப் பாலினத்தவர். செம்மையாகவும் அடிக்கடி பொதுவாக பயன்படுத்தப் பட்டாலும், இச் சொல்லானது ஒருவருடைய பாலியல் நடத்தை அல்லது பால் நிலை அடையாளத்தை பொதுவில் ஏற்க்கும் அம்சத்தை கொண்டுள்ளது, “வெளியே” இனை பார்க்கவும்.

மறைமுகம் (Closeted)

ஒருவர் அவரது பாலியல் நாட்டத்தை  அல்லது பாலின அடையாளத்தினை வெளிப்படுத்தாத நபரை இது விவரிக்கிறது. இது சுருக்கமாக, "ஒரு ஆண் ஓரினச் சேர்க்கையாளர், பெண் ஓரினச் சேர்க்கையாளர்அல்லது மாற்றுப்பாலினத்தவர் அவரது பாலியல் அடையாளத்தை பற்றி வெளியே தெரிவிக்காமல் இருத்தல்” என்பதைக் குறிக்கும்.

வெளிப்படுத்தல் (Outing)

பொதுவில் வெளிப்படுத்தும் செயல் (சில வேளை வதந்தியின் அடிப்படையில்) இன்னொரு நபரின் பாலியல் நடத்தை அல்லது பால் நிலை அடையாளத்தை அந்நபரின் விருப்பின்றி வெளிப்படுத்தனை குறிக்கும். இது எல். ஜி. பி. டி சமூகத்தின் பரந்த பகுதியினர் செய்யப்படக்கூடாத ஒரு செயற்பாடாக கருதுகின்றனர்.

வாழ்க்கைமுறை (Lifestyle)

ஒரு ஆண் ஓரினச் சேர்க்கையாளர், பெண் ஓரினச் சேர்க்கையாளர்அல்லது மாற்றுப்பாலினத்தவரின் வாழ்க்கையை அவதூறு செய்ய ஓரினச் சேர்க்கை-எதிர்ப்புவாதிகளால் பயன்படுத்தப்படும் தவறான சொல். எதிர்ப்பால் ஈர்ப்பினருக்கென்றே ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைமுறை காணப்படாதது போன்றே ஆண் ஓரினச் சேர்க்கையாளர், பெண் ஓரினச் சேர்க்கையாளர்அல்லது மாற்றுப்பாலினத்தவர்களும் என்றே குறிப்பிட்டதொரு வாழ்க்கைமுறை இல்லை.

# சொற்களஞ்சியம்

திருமணம் (Marriage)

பொதுவாக, திருமணம் என்பது சட்டபூர்வமாக ஒரு குடும்பத்தைக் கட்டியெழுப்ப மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும், இது அரசாங்கத்தின் நிதியுதவி மற்றும் பிற சேவைகளுக்கான அணுகலைப் பெறுகிறது. ஒரே பாலினத்தை சேர்ந்த நபர்களைக் கொண்ட ஜோடி இலங்கையில் அல்லது வேறு எந்த தெற்காசிய நாடுகளிலும் திருமணம் செய்ய முடியாது. 2017 ம் ஆண்டு வரை, ஒரே பாலினத்தை சேர்ந்த நபர்கள் உலகில் சுமார் 20 நாடுகளில் திருமணம் செய்யலாம்.

சிவில் ஒன்றியம் (Civil Union)

திருமணமான நபர்களுக்கு வழங்கப்படும் பல உரிமைகளுடன் (சில உரிமைகள் வழங்கப்படவில்லை), பொறுப்புகள் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் அங்கீகரித்துள்ள மாநிலங்களில் உள்ள ஆண்கள் அல்லது பெண்களுக்கு இடையேயான உறவு.

கூட்டாண்மை இல்லம் (Domestic Partnership)

இரு நபர்களுக்கு இடையிலான உறவுக்கான சிவில்/சட்ட அங்கீகாரம். சில சந்தர்ப்பங்களில் இது குறிப்பிட்டளவு பாதுகாப்பை அவர்களுக்கு வழங்கும்.

சொடொமி சட்டங்கள் (Sodomy Laws)

வரலாற்று ரீதியாக இச் சட்டங்கள் ஓரினச் சேர்க்கையாளர்களை கைது செய்யவும் துன்புறுத்தவும் பயன்படுத்தப்பட்டன. "சொடொமி" எனும் சொற்பதமானது ஒரு போதும் ஆண் ஓரினச்சேர்க்கையா-ளர்கள், பெண் ஓரினச்சேர்க்கையாளர்கள்,இரு பால்சேர்க்கையாளர்கள் அல்லது பாலியலை சித்தரி-க்கபி பயன்படுத்தப்படக் கூடாது.

ஆரம்பத்தில் இலங்கையின் குற்றவியல் சட்டக்கோவையின் 365 பிரிவின் மூலம் குறிக்கப்பட்டு, தற்போது 365(A) பிரிவின் மூலம் ஆன், பெண் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கிடையிலான பாலியல் தொடர்பு குற்றமாக்கப்பட்டுள்ளது.

# அறிமுகம்

இலங்கை பன்முக, பல மத மற்றும் பல்வேறு கலாச்சார அடையாளங்களை உள்ளடக்கிய ஒரு சமூக அமைப்பாகும். சமூக நெறிகள் மற்றும் மக்களின் மனப்பான்மைகள் இலங்கையின் குடிமக்கள் மற்றும் அரசியல் நிலைகளை பாதிக்கின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், இந்த சமூக நெறிகள், மனப்பான்மைகள், மதிப்புகள், மற்றும் ஒரே மாதிரிகளைபி பொதுப்படுத்தல் ஆகியவை சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட குழுவை முன்னுரிமை செய்வதற்கு கட்டப்பட்டிருக்கின்றன. இங்கே, முன்னுரிமை பெறும் குழு தவிர்க்க முடியாமல் பெரும்பான்மையாக மாறும் மற்றும் கீழ்ப்படியும் நிலையைக் கொண்ட குழு சிறுபான்மை ஆகிறது. --- இதன் விளைவாக, பெரும்பான்மையால் ஏற்றுக்கொள்ளப்படும் சமூக அமைப்பும் சமூக விதிகளும் நிலையானதாக மாறும். இனம், மதம், பிற கலாச்சார கருத்துகள் மற்றும் பாலியல் நிலை ஆகியவற்றுடன் வேறுபாடுகள் உருவாக்கப்படுகின்றன. இலங்கை அரசியலமைப்பின் படி சாதி, இனம், அரசியல் கட்சி, மதம் மற்றும் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறுபட்ட அடையாளங்களை இலங்கையர்கள் கொண்டிருக்கிறார்கள், ஒவ்வொரு அடையாளமும் வெவ்வேறு மதிப்புகளை பெறுகிறது.

பாலியல் அடையாளங்களின்படி வேறுபட்ட குழுக்களின் கலந்துரையாடலில், பாலியல் தன்மை, வெவ்வேறு பாலியல் விருப்பம் மற்றும் பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்ட குழுக்கள் போன்ற குழுக்கள் காணப்படுகின்றன. இந்த குழுக்களுக்களை விபரிக்க பல்வேரு வழிகள் மற்றும் பெயர்கள் உள்ள போதிலும் ஆனால் மனித உரிமைகள் ஆதாரங்களின் படி, அவர்கள் LGBTIQ (பெண் ஓரினச் சேர்க்கையாளர், ஆண் ஓரினச் சேர்க்கையாளர், இரு பால் இனத்தாரோடும் உறவு கொள்பவர்கள், மாற்றுப் பாலினத்தவர், உள்ளான உடலுறவு மற்றும் கேள்விக்குட்படுத்தல்) சமூகமாக வகைப்படுத்தப்படுகிறார்கள்.

பெண் ஓரினச் சேர்க்கையாளர், ஆண் ஓரினச் சேர்க்கையாளர், இரு பால் இனத்தாரோடும் உறவு கொள்பவர்கள், ஆகியோர் தமது பாலியில் நாட்டத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுவதுடன் மாற்றுப் பாலினத்தவர் மற்றும் குறுக்குப் பாலினத்தவர்கள் அவர்களின் பாலினத்தை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றனர். பாலியல் நாட்டம் மற்றும் பாலினம் ஆகியவை அடுத்த அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்படும். மேற்குறிப்பிடப்பட்ட சமூகம் இலங்கையில் பல்வேறு வகையான முறைகேடுகள், ஓரங்கட்டுதல், மற்றும் பாகுபாடு ஆகியவற்றை அனுபவித்து, அதன் விளைவாக, அவர்கள் எதிர்காலத்தைப் பற்றி அவநம்பிக்கை, சந்தேகம், அச்சம் மற்றும் நம்பிக்கையற்ற தன்மையுடன் தொடர்ந்து வாழ்கின்றனர். மேலும், குடும்பங்கள், சக நண்பர் குழுக்கள், கல்வி நிறுவனங்கள், சுகாதார சேவை வழங்குநர்கள், அரசு மற்றும் தனியார் சேவை வழங்குநர்கள், பொலிஸ் போன்ற நிறுவனங்கள், சட்டங்கள், மத நிறுவனங்கள் மற்றும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் இடங்கள், மத நடைமுறைகள், வெகுஜன ஊடகங்கள் மற்றும் பணியிடங்களில் அவர்கள் பாகுபடுத்தப்பட்டு தீங்கிழைக்கும் கேலி மற்றும் தவறான நடத்துதல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இலங்கையின் சட்டங்களானது சமுதாய மட்டத்தில் நடைபெறும் பல்வேறு தொந்தரவுகள் மற்றும் பாகுபாடு ஆகியவற்றை மேலும் மோசமாக்குகிறன. பிரிட்டனின் காலனியாக இருந்த பல நாடுகளினைப் போலவே, இலங்கையின் தற்போதைய சட்டங்கள் விக்டோரியா ஒழுக்கநெறியை அடிப்படையாகக் கொண்டவை. அதன்படி, பாலியல் விருப்பம் மற்றும் பாலியல் நட்டங்களை கருத்தில் கொண்டு, சட்டம் பல்வேறு பாலியல் அடையாளங்களை கொண்ட நபர்களுக்கு எதிராக செயல்படுத்தப்படுகிறது. ஒரே பாலினத்துக்கும் இடையே உள்ள பாலியல் உறவுகள் குற்றமாக்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாக காணப்பட்ட பெண்களுக்கு எதிரான பாரபட்சமான சட்டங்கள் தற்போது முற்போக்கான போக்குக்கு மாறினாலும், LGBTQஐயு சமுதாயத்திற்கு எதிரான பாகுபாட்டுடனான சட்டங்கள் தொடர்ந்து வலுவாகவும், அவ்வாறாகவே உள்ளன. எனவே, பல்வேறு பாலியல் அடையாளங்கள் கொண்ட சமூகம் பொலிஸ் நிலையிலிருந்து தொடர்ச்சியான தலையீடுகளைப் பெறுகிறது, மேலும் இந்தச் சமூகத்தின் மீது தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவதற்கு போலீசாரால் தற்போதைய சட்டங்களில் உள்ள குழப்பங்கள் கையாளப்படுகின்றன.

சமுதாயத்தால் தூண்டப்பட்டு, குற்றவாளிகளாகக் கருதப்படும் பாகுபாடுகளின் முடிவு, அவர்கள் ஒரு ஓரங்கட்டப்பட்ட ஓர் சமூகமாக குறைக்கப்படுவதே ஆகும். இதன் மிக அபாயகரமான விளைவு, இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யக்கூடிய நபர்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய நபர்கள் சுய மரியாதையுடனான வாழ்க்கையைப் பெறாததனால் வேலைவாய்ப்பு,

கல்வி மற்றும் அகதிகளாக வேறு நாடுகளுக்கு இடம்பெயர்வதற்கு நிர்பந்திக்கப்படுவதாகும். இந்த சூழ்நிலையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நபர்கள் மத்தியில் ஊடகவியலாளர் இருக்கி-ன்றனர் என்று நாங்கள் நம்புகிறோம். ஊடகங்கள் இரண்டு வழிகளில் பல்வேறு பாலியல் அடை-டயாளங்களைக் கொண்ட சமூகத்தின் நல்வாழ்வுக்கு பங்களிப்பை வழங்குவதை நாம் அடையாளம் காணலாம்: முதலாவதாக, அவர்களின் மனித உரிமைகள் மற்றும் சுய மரியாதைகளை பாதுகாக்கும் வகையிலான பல்வேறு பாலியல் அடையாளங்களைக் கொண்ட நபர்களைப் பற்றிய சம்பவங்கள் மற்றும் செய்திகளை வெளியிடுதல். இது ஊடக நடைமுறைகளின் மூன்று கோட்பாடுகளை கடைப்பிடி-ப்பதன் மூலம் அடையப்படுகின்றது. அதாவது துல்லியமான அறிக்கையிடல், உணர்வு பூர்வமான அறி-க்கையிடல் மற்றும் நெறிமுறை அறிக்கையிடல் போன்றவற்றை குறிக்கும். இரண்டாவதாக, பல்வேறு பாலியல் அடையாளங்களுடனான சமூத்திற்காக சமூகத்தில் பரிவுணர்வை ஏற்படுத்தும் விதத்தில் ஒரு அறிவுபூர்வமான மற்றும் ஆக்கபூர்வமான முறையில் அறிக்கையிடல். அரசியல்வாதிகள் மற்றும் சமூக சீர்திருத்த செயல்பாட்டில் செயற்படும் சமூக விஞ்ஞானிகளை விட ஊடகவியலாளர்கள் உயரிய நிை-லயில் வைக்கப்படுவதனால், அவர்கள் ஒரு குறிப்பிடத்தக்க பாரிய பங்களிப்பை துல்லியமான மற்றும் உணர்வு பூர்வமான எழுத்து மற்றும் அறிக்கையின் மூலம் வழங்க முடியும். இந்த கையேடு உங்களு-க்குத் தேவையான உணர்திறன் மற்றும் அறிவுக்கான வழிகாட்டுதல்களை வழங்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

பல்வேறு பாலியல் விருப்பங்களுடனான சமுதாயத்திற்காக பணியாற்றுவதன் மூலம் நாம் பெற்ற அனுபவங்கள் மற்றும் அறிவின் களஞ்சியத்துடன் இந்த புத்தகத்தை உங்களுக்கு ஈக்வல் கிரௌண்ட் அமைப்பு அளிக்கிறது. எல்லோரும் மனித உரிமைகளுடன் எதுவித துன்புறுத்தல்களும் இல்லாமல் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். பல்வேறு பாலியல் அடையாளம் கொண்ட நபர்கள் இத்தகைய எதிர்பார்ப்புக்களை கொண்டிருப்பதால், நீங்கள் உங்கள் எழுத்துக்களையும் அறி-க்கையிடும் திறன்களையும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்துவீர்கள் என நம்புகின்றோம்.

# பாலியல் நாட்டம் மற்றும் பாலினம் தொடர்பான அறிமுகம்

ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணுக்கு இடையிலான பாலியல் உறவின் போது ஒரு விந்து மூலம் கருவுறுதல் மூலம் மனிதர்கள் பிறக்கின்றனர் என்பது பொதுவான அறிவு. குரோமோசோம்கள் என்று அழைக்கப்படும் மரபியல் பொருள், பிறக்கும் குழந்தையின் ஆண் அல்லது பெண் எனும் உயிரியல் பாலினத்தை தீர்மானிக்கிறது. இது முற்றிலும் ஒரு உயிரியல் நிகழ்வு ஆகும், இது பெற்றோரின் விருப்பங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட முடியாது. இதனால், ஆண்மையும், பெண்மையும், உயிரியல் ரீதியாகத் தீர்மானிக்கப்படும் படைப்புகள் ஆகும். வெளிப்புற மற்றும் இனப்பெருக்க உறுப்புக்கள், பாலின கலன்கள், இரண்டாம் பாலின பண்புகள் போன்ற இனப்பெருக்கம் செயல்முறைக்கு பங்களிக்கும் குணாதிசயங்கள் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே வேறுபடுகின்றன. கீழே உள்ள எடுத்துக்காட்டினை பரிசீலனை செய்யுங்கள்.



மேலே காணாப்படுவதன் படி, ஒரு நபரின் வாழ்க்கையில் முக்கியமான மூன்று உடல் உறுப்புகள் உள்ளன. அவை மூளை, இதயம் மற்றும் பாலியல் உறுப்புக்கள் ஆகும். மூளை மனிதனின் மன நடைமுறைகள், எண்ணங்கள் மற்றும் ஹார்மோன்களின் உற்பத்தியில் ஈடுபடுகையில், இதயம் இரத்த ஓட்டம் மற்றும் காதல், பாச உணர்வு போன்ற உணர்ச்சி சம்பந்தமான விடயங்களுடன் தொடர்புடையது. பாலியல் உறுப்புகள் இனப்பெருக்கம் மற்றும் பாலியல் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கின்றன. பாலியல் உறுப்புகள் மட்டுமே ஒரு நபரின் பாலியலிணைக் கருத்திற்கொள்கையில் பொதுவாக கருதப்படுகிறது. சமூக, கலாச்சார காரணிகளால் நிர்ணயிக்கப்படும் பெயர், குடும்பம், மதம், இனம் மற்றும் சாதி போன்றவை உயிரியியல் மூலம் பிறந்த குழந்தைக்கு ஒதுக்கப்படுகின்றது. குழந்தை பிறந்தவுடன், உயிரியல் ரீதியாக தீர்மானிக்கப்பட்ட ஆண்மையும், பெண்ணும், ஆண்களுக்கு நீல நிற ஆடை அணிவித்தும், பெண்களுக்கு இளஞ்சிவப்பு ஆடைகளை அணியப்படுத்துவதன் மூலமும் சமூகத்திற்கு இயைபாக்கின்றனர். இந்த கட்டத்தில் இருந்து, பாலினங்களுக்கு இடையே உயிரியல் வேறுபாடு ஒரு சமூக கண்ணோட்டத்தைக் கொடுக்கிறது. அதற்குப் பிறகு, ஆண்களும் பெண்களும் இரண்டு வெவ்வேறு வகையான மனிதர்களாக சமூகமயமாக்கப்படுவதுடன், ஆணாதிக்க மதிப்பீடுகளும் மேலாக எடுத்துக்காட்டப்படுகின்றது. இதன் விளைவாக, உயிரியல் பாலினமானது சமூக அணுகுமுறை, விதிமுறை, ஒரே மாதிரியான பொதுப்படுத்தல் மற்றும் கலாச்சார மாறிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களை வித்தியாசமாகக் கருதுகின்ற ஒரு சமூகவியல் சம்பந்தமான விவகாரமாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஒக்லியின் (முயமடநல - 1974)[1] படி, உயிரியல் காரணிகளின் அடிப்படையிலான சமூக அணுகுமுறைகளும் நடைமுறைகளும் சமூகமயமாக்கலின் மூலம் மேலும் செயல்படுத்தப்படுகின்றன.

- சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட சமூக நடத்தைகள்
- பல்வேறு இலக்குகளை நோக்கி பெண்கள் மற்றும் ஆண்களை இயக்குதல்
- பல்வேறு நிலைகளை வாய்மொழியாகவும் நடைமுறை ரீதியாகவும் வழங்குதல்
- ஒருவருக்கொருவர் வித்தியாசமாக இருக்கும் நடவடிக்கைகளினை நோக்கி இயக்குதல்

[1] "The Sociology of Housework. Ann Oakley ," American Journal of Sociology 82, no. 3 (Nov., 1976): 738-740

இந்த காரணிகளின் மூலம், பெண்கள் மற்றும் ஆண்கள் பற்றிய சமூக மனப்பான்மைகள் அடுத்த தலைலமுறைகளுக்கு நீட்டிக்கப்படுகின்றன. மேலே உள்ள நிலைப்பாட்டிலிருந்து அறிவுரை வழங்குவதற்கு முயமடநல கூற முயல்வது என்னவென்றால், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான பிரிவினையை அடிப்படை உயிரியல் ரீதியாக இருந்தாலும், அவர்களது பாத்திரங்கள் கலாச்சார நடத்தைகளின் மூலம் வடிவமைக்கப்படுகின்றன. இந்த கலாச்சார நடத்தைகள் பாலினமாக அடையாளம் காணப்படுகின்றது. பாலினத்தை அடிப்படையாகக் கொண்ட சமத்துவமின்மை ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை மட்டுமே அறிந்திருக்கிறது. இந்த வேறுபாடு ஆண்களை வலுவானவர்களாகவும் பலம் வாய்ந்தவர்களாகவும் காட்டுவதுடன் பெண்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளுகின்றது. இந்த வாதத்தின்படி, உயிரியல் அவசியமும் சமூக விளக்கமும் ஆகிய இரு அடுக்குகளை அடையாளம் காண முடியும். உயிரியல் அவசியங்களைப் பற்றிய அடுக்கு, ஆண்கள் மற்றும் பெண்களின் இனப்பெருக்க நடவடிக்கைகளைக் கருதுகிறது, அதேசமயத்தில் சமூக விளக்கங்கள் அவற்றின் வாழ்க்கை முறைகளையும் அதிகாரங்களை விரிவுபடுத்துவதையும் கருதுகின்றன. இந்த அடிப்படையில், பல்வேறு பாலின அடையாளங்களுடன் கூடிய சமூகங்கள் பாலினத்தின் அடிப்படையில் வேறுபடுகின்றன. உயிரியல் ரீதியாக ஆணும் பெண்ணும் குறிப்பிட்ட வகையானதாகவும் அது மாறாததாகவும் கருதபடுகின்றது. குடும்பங்கள், பாடசாலைகள், பணியிடங்கள், மத நிறுவனங்கள் மற்றும் அரசியல் அமைப்புகள் ஆகியவற்றில் உள்ள அமைப்புகள் இந்த காரணிக்கு உகந்த விதத்தில் ஏற்பாடு செய்துள்ளதைக் காணலாம். தற்போதைய சமூக நெறிமுறையின்படி, பெண்ணின் பணி பாலினம், இனப்பெருக்கம் மற்றும் தாய்மை ஆகியவற்றை ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு மாற்றியமைப்பதாகும். இவ்வகையில், ஒருவர் உயிரியல் ரீதியாக பெண்ணாக பிறந்துவிட்டால் இந்த விடயங்களை மாற்ற முடியாது. மேலும், அவர் இனப்பெருக்கம், தாய்மை மற்றும் பாலியல் தொடர்பான கதாபாத்திரங்களை மேற்கொள்ள வேண்டும். இது ஆண்களுக்கும் பொருந்துகிறது: பாலியல், இனப்பெருக்கம், தந்தை, மற்றும் குடும்பத்தின் பெயரைச் சார்ந்த பாத்திரங்களில் பங்கெடுப்பதில் அவர்கள் நிர்பந்திக்கப்படுகிறனர்.

மாற்றுப்பால் இனத்தவர்கள் மற்றும் ஓரினச்சேர்க்கையாளர்கள் மேலே கூறப்பட்ட விதிமுறைகளிலிருந்து வேறுபடுகின்றனர், ஏனெனில் அவர்கள் சமுதாயத்தால் வழங்கப்படும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாது. மேலும், சமுதாயத்தால் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட பாத்திரங்கள், பணிகள் மற்றும் நிலைகளை அவர்கள் மறுப்பதுடன் அவர்களது நடவடிக்கைகள் மேல் கூறப்பட்ட பணியில் இருந்து விலகியுள்ளன. பொம்மைகளுடன் விளையாடுவது, சிறிய கொள்கலன்களில் சமையல் விளையாடுதல், கழுத்தணிகள், வளையல்கள் மற்றும் முடி கிளிப்புகள் அணிந்துகொள்வது போன்ற பெண் பிள்ளைகளின்நடத்தைகள் உரிய காலத்தில் பாலியல், இனப்பெருக்கம், தாய்மை ஆகியவற்றிற்கு வழிவகுக்கும். ஆன் பிள்ளைகள் கார்கள், பேட் மற்றும் பந்துகள் மற்றும் போலி துப்பாக்கிகளுடன் விளையாடுகின்றனர், இதன்மூலம் எதிர்காலத்தில் அவர்களுக்கு எது காத்திருக்கிறது என்பதற்கான வழிகாட்டலைப் பெறுகிறார்கள்.

ஒரு இளம் பெண் வயதை அடைவது மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட சடங்குகளும் பாலியல் தாக்கங்களும், திருமணம் தொடர்பான சம்பிரதாயங்கள், பெண் கன்னிமை சோதனை, கருவுறுதல், மலட்டுத்தன்மை, கருவுறுதல் சடங்குகள் போன்ற செயற்பாடுகள் பெண்கள் பற்றி பாலின அடிப்படையிலான கருத்தாக்கங்களை வலியுறுத்துகின்றன. இந்த கருத்துக்களை மேலும் வலுப்படுத்தும் சமூகப் பணிகளைப் பொறுத்தவரை, பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் மாற்றுப்பால் பெண்/திருநங்கை பெண்களுக்கு சமூக மனப்பான்மைகள் வித்தியாசமான நிலைப்பாட்டை எடுக்கின்றன. அவர்கள் சமூகத்திற்கு விரோதமானவர்களாகவும், அசாதாரண செயல்களிலும் குற்றவாளிகளாகவும் சம்பந்தப்பட்ட நபர்களாக கருதப்படுகின்றனர். இருப்பினும், அவர்களை பாதிக்கும் சமூக மற்றும் உளவியல் காரணிகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக ஊடகங்களில் இருந்து வரும் நபர்களாக, பாலினம், பாலியல் நாட்டம், மற்றும் வெவ்வேறு பாலியல் அடையாளங்களைக் கொண்டவர்கள் ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடுகளை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். கீழே உள்ள விளக்கப்படத்தை பார்க்கவும்.



இதில் விஸ்தரிக்கப்பட்டுள்ள நபர் நீங்கள் என ஒரு கணம் நினையுங்கள். இந்த விளக்கம் பாலியல் குறித்த முந்தைய விளக்கத்தை மிகவும் சிக்கலானதாக மாற்றியுள்ளது. இதன் படி, ஒரு நபரின் மூளையின் செயல்பாடுகள் அவர்களின் பாலினத்தை தீர்மானிக்கின்றன. வேறு வார்த்தைகளில் கூறுவ-தானால், பாலியல் என்பது மூளையின் செயல்பாடுகளின் ஒரு சமூக வெளிப்பாடாக காட்டப்படுகிறது. ஒரு நபரின் பாலியல் உறுப்புகளுடன் தொடர்புபட வேண்டிய மனச் செயல்பாடுகள் எல்லா நேரங்க-ளிலும் ஒத்துப்போவதில்லை. நீங்கள் ஆண்/பெண் பாலியல் உறுப்புக்களை கொண்டிருப்பதாலா அல்லது, நீங்கள் ஒரு ஆண்/பெண் ஆக உணர்கிறீர்கள் என்பதாலா உங்களை ஒரு ஆணாக/ பெண்ணாக கருதுகிண்றீர்கள் என்று ஒரு கணம் சிந்தியுங்கள். தமது பிறப்பின் போது தமக்களிக்க-ப்பட்ட பாலிற்கு எதிரான பாலினத்தை தாம் சேர்ந்தோர் எனக் கருதும் நபர்கள் இவ்வுலகில் காணப்படுகின்றனர். அவர்கள் மாற்றுப்பால் இனத்தவர் சமூகம். ஒருவரை மாற்றிப்பாலினத்தவராக்குவது என்ன என்பதைப் பற்றி ஆராயும் பல ஆய்வுகள் உள்ளன.

அந்த ஆய்வுகளின் படி, ஒரு நபரினை மாற்றுப்பால் இனத்தவர் ஆக்கும் ஒரு திட்டவட்டமான காரணம் என்னவென்று கருத முடியாது. சில ஆய்வாளர்கள், ஒரு நபரின் மூளையின் ஹைபோதலமஸ் (ாலிழ-வாயடயஅரள) பகுதியில் ஏற்படுகின்ற செயற்பாடுகளினால் இது தீர்மானிக்கப்படுகிறது என்று வாதிடுகி-ன்றனர். மூளையின் மன உறுதியுடன் மனநிலை மற்றும் ஒரு நபர் தன்னைத் தானே உணர்ச்சி ரீதியாக புரிந்து கொள்ளும் விதம் பாலியல் உறுப்புகளிலிருந்து வேறுபடலாம் என்று அவர்கள் வாதிடுகின்றனர். ஒரு நபர் மாற்றுப் பால் இனத்தவரா அல்லது இல்லையா என்பதை தீர்மானிப்பதில் அவர்களின் முதல் சில நிலைகளில் நடைபெறும் ஆண்கள் மற்றும் பெண்களின் பற்றிய அவதானிப்புகள் ஆளுமை வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்துகின்றன என சில ஆராய்ச்சியாளர்கள் வாதிடுகின்றனர். நபர்களின் உணர்ச்சிகள் இதனுடன் இணைக்கப்பட்டிருப்பதால், மாற்றுப்பால் இனத்தவராக இருப்பது தொடர்பான உயிரியல் காரணங்களை துல்லியமாக வெளிப்படுத்த முடியாது. நீங்கள் மனதில் தாங்க வேண்டியது என்னவென்றால், பாலியல் என்பது உயிரியல் காரணிகளால் மட்டுமல்லாது, உளவியல் ரீதியிலான காரணிகளிலாலும் தீர்மானிக்கப்படுவதுடன், பல்வேறு பாலியல் அடையாளங்கள் இருக்கக்கூடும் என்ப-தாகும். அதற்கேற்ப, ஒரு நபர் பிறப்பின் போது ஆணாக அடையாளப்படுத்தப்பட்ட போதிலும் அவர் தங்களை ஒரு பெண் என்று உணர்ந்து, அவர்களின் நடத்தை மற்றும் சூழ்நிலையை அதற்கேற்ப மாற்றிக் கொள்கிறார்கள்.

அத்தகையோர் மாற்றுப்பால் பெண்/திருநங்கையாக அழைக்கப்படுகிறார்கள். இதேபோல், ஒரு நபர் பிறப்பின் போது பெண்ணாக அடையாளப்படுத்தப்பட்ட போதிலும் அவர் தங்களை ஒரு ஆண் என்று உணர்ந்து, அவர்களின் நடத்தை மற்றும் சூழ்நிலையை அதற்கேற்ப மாற்றிக் கொள்கிறார்கள். அத்-தகையோர் மாற்றுப்பால் ஆண்/திருநம்பி என அழைக்கப்படுகிறார்கள். நவீன மருத்துவமானது பாலியல் ரீதியான அறுவை சிகிச்சை மூலம் அவர்கள் தம்மை அடையாளம் காணும் பாலுக்கேற்றவாறு உடலு-றுப்புக்களை மாற்றுவதற்கு வசதிகளை வழங்குகிறது. இருப்பினும், பாலியல் உறுப்புகள் அல்லது உடலை மாற்றுவது அவசியம் அல்ல, மேலும் இந்த மருத்துவ நடைமுறைகளை மேற்கொள்ள மற்றொருவரை கட்டாயப்படுத்தவும் முடியாது. பல மாற்றுப்பால் இனத்து நபர்கள் தங்கள் பாலியல் உறுப்புகள் தமக்கு பொருந்தாது என்பது பற்றி எண்ணுவதற்கு கணிசமான அளவு நேரம் எடுத்துக்கொ-ள்கிறார்கள், அதாவது எதிரான பாலினத்திலிருந்து ஒருவர் போல் அவர்கள் செயல்பட அவசியம் இல்லை என்று கவனமாக சிந்திப்பார்கள். இதற்கான காரணம் சமூக அமைப்பானது மாற்றுப்பால் இனத்தாரோடு பாரபட்சத்துடனும் எதிரான குற்றச்சாட்டுகளுடனும் செயற்படுவதாகும். இதன் விளைவாக, மாற்றுப்பால் இனத்து குழந்தைகள் சமுதாய அழுத்தங்களை எதிர்த்து போராடும் போது தங்கள் சொந்த மனம் மற்றும் உடல் இடையே மோதலினையும் எதிர்நோக்க வேண்டும்.

நீங்கள் ஒரு மாற்றுப்பால் இனத்து நபரினை சந்திக்க நேர்ந்தால், அவர்கள் ஏற்கனவே தங்கள் தனி-ப்பட்ட மற்றும் சமூக போராட்டங்களில் சோர்வாக இருப்பதை நினைவில் கொள்ளுங்கள். பல மாற்று-ப்பாலினத்தவர்கள் தங்கள் வீடுகளில் இருந்து துரத்தப்படுவதுடன் அவர்கள் தம் பணியிடங்களிலிருந்து நிராகரிக்கபடுகின்றனர். எனவே, அவர்கள் தங்கள் வாழ்க்கையை ஆபத்தில் சிக்கவைத்து ஒழுங்கற்ற வேலைகளை செய்ய நிர்பந்திக்கப்படுகிறார்கள். சமுதாயத்தில் இருந்து அந்நியமாதல் மற்றும் கேலிக்-குரிய விளைவுகளின் காரணமாக, தனிநபர்கள் குறைந்த சுய மரியாதையுடனும் தொடர்புடைய பிரச்சினைகளையும் எதிர்கொள்கிறார்கள், இது அவர்களுக்கு மனநிறைவற்ற நிலைக்குள்ளாக்குவதுடன் மன நோய்களையும் ஏற்படுத்துகின்றன. மன அழுத்தம், மன இளைப்பு, பதட்டம் மற்றும் நரம்பியல் குழப்பங்கள் போன்ற கடுமையான மனநல நோய்களால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள், சில நேரங்க-ளில் இந்த நோய்களை தாங்க முடியாத நிலைக்கு வந்துவிட்டால், அவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

பல மாற்றுப்பாலினத்தவர்களுக்கு பாலின மறுசீரமைப்பு அறுவை சிகிச்சையை மேற்கொள்வதற்கு போதிய நிதி இல்லை. பல்வேறு ஹார்மோன்கள், மார்பகங்களின் ஊடுருவல் அல்லது மார்பக விரிவாக்க அறுவை சிகிச்சை மூலம், அவர்கள் தங்கள் மனநிலைக்கு ஏற்ப தங்கள் உடல்களை மாற்றிக் கொள்கிறார்கள். குறிப்பிட்ட பாலின மறுசீரமைப்பு அறுவைசிகிச்சைக்குப் பின்னர், இந்த நபர்கள் திருநர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஒரு திருநர் தங்கள் நிலைமாற்றத்தில் மூன்று நிலைகளை அனுபவிக்கிறார் என்று ஆய்வுகள் காட்டுகின்றன.

சமூக மாற்றங்கள -

மனநிலையை அடையாளம் காட்டும் பாலினத்திற்கேற்ப, தங்கள் நடத்தையை சரிசெய்து, தினசரி வாழ்க்கையில் சமூக தொடர்புகளை எளிதாக்குவதற்கு பெயரை மாற்றல், உடை, சிகை அலங்காரங்களை மாற்றல் முதலியன.

சட்ட மாற்றங்கள் -

உத்தியோகபூர்வ ஆவணங்களின் தேவைகளுக்கேற்ப முறையாக பெயரை மாற்றுதல், அவர்கள் அழைக்கப்படும் வழி, பாலினம் மற்றும் பாலியல் ஆகியவற்றை மாற்றல்

மருத்துவ மாற்றங்கள் -

ஹார்மோன் சிகிச்சைகள், அறுவை சிகிச்சை, மற்றும் பால் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை மூலம் ஒருவரின் அடையாளத்தை மாற்றுதல்

பல ஆசிய நாடுகளில், மாற்றுப்பால் இனத்து சமூகம் சட்ட மாற்றத்தினை மேற்கொள்வதற்கான சாத்தியம் இல்லை, ஆனால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஈக்வால் கிரௌண்ட் அமைப்பு போன்ற அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் இந்த சமூகத்தின் உறுப்பினர்களின் முயற்சிகளின் விளைவாக இலங்கையில் உள்ள மாற்றுப்பால் சமூகம் சட்டப்பூர்வமாக ஒரு சில செயற்பாடுகளினூடு உத்தியோகபூர்வ ஆவணங்களை மாற்ற முடியும்.

மேலே கூறப்பட்ட இரண்டாவதாக காட்டப்பட்ட விளக்கப்படத்தின் படி, பாலியல் நாட்டம் என்பது ஒருவருக்கு ஒருவர் உடல் ரீதியாகவும், மனோ ரீதியிலும் உள ரீதியிலும் ஈர்க்கப்படுவதாகும். சமூகம் வெறுமனே பாலியல் சார்பை வெறுமனே உடல் ரீதியான கவர்ச்சியாகப் புரிந்துகொள்கிறது. மேற்கூறப்பட்ட படிப்பின்கீழ் ஒருவர் தன் இதயத்தில் அன்பை உணருகிறார். இது விவாதிக்கப்பட்ட ஒரு புள்ளியாக காணப்படினும், பாலியல் நாட்டம் என்பது இதயத்துடன் இணைந்த ஒன்று என்று பலர் நம்புகின்றனர். ஒரு ஆண் அல்லது பெண் ஈர்க்கப்பட்டிருக்கும் பாலினத்தை பாலியில் நாட்டம் குறிக்கின்றது.

பாலியல் நாட்டத்தை விவரிப்பதில், சில ஆய்வுகள் அதை மூன்று வகைகளாக பிரிக்க முயல்கின்றன.

- யார் சார்பாக கவர்ந்திழுக்கபடுகிறார்? (பாலியல் ஈர்ப்பு)
- யாருடன் பாலியல் செயலில் ஈடுபடுகிறீர்கள்? (பாலியல் நடத்தை)
- ஒருவரின் அடையாளத்தை அவர் எவ்வாறு உணர்கிறார் (பாலியல் அடையாளங்கள்)

இதற்கிணங்க ஒரு நபர் தங்கள் எதிர் பாலினத்திற்கு உள ரீதியாக ஈர்க்கப்படின் எதிர்ப்பால் ஈர்ப்பினர் எனவும் ஒரு நபர் தங்கள் தன் பாலினத்திற்கே உள ரீதியாக ஈர்க்கப்படின் ஓர்பால் ஈர்பினர்/ஓரினச்சேர்க்கையாளர் எனவும். இரு பால்களுக்கும் ஒருவர் ஈர்க்கப்படும் நிலையில் இரு பால்சேர்க்கையாளர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். ஓரினச்சேர்க்கை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்: இரு ஆண்கள் இடையே உடல், மன மற்றும் உள ஈர்ப்பு இருக்கு ம்போது அவர்கள் “ஆண் ஓரினச்சேர்க்கையாளர்“ என்று அழைக்கப்படுவார்கள், அதே சமயம் பிற பெண்கள் மீது உடல், மன மற்றும் உள ஈர்ப்பு கொண்ட பெண்கள் “பெண் ஓரினச்சேர்க்கையாளர்” என்று அழைக்கப்படுகிறார்கள். ஓரினச்சேர்க்கை பாரம்பரியமாக “பாலியல” என்று கருதப்பட்டாலும், இன்றும் “கே” மற்றும் “லெஸ்பியன்” ஆகிய சொற்கள் ஊடகங்களில் பரவலாக பயன்படுத்தப்படுகின்றன.

அனைத்து நபர்களும் எதிர்பால் ஈர்ப்பினர்கள் என்ற கருதுகோள்களின் அடிப்படையில்சட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூக அமைப்புக்களின் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்படுவதால், இந்த நிலைக "எதிர்பால் ஈர்ப்பினர்கள்சார் நிலை/ஹெடெரோநோமடிவிட்டி" (ாநவநசழழெசஅயவளைவைல) என்று அழைக்கப்படுகிறது. ஓரினச்செரிக்கையாளர்களை கேலிக்குரியவர்களாக்கல், அவர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுகதல், அவர்களைக் குறை கூறல், அவர்களைத் தவிர்ப்பது முதலியன "ஹோமோபோபியா"/ஓரினச்சேர்க்கையாளர் மீதான வெறுப்பு என அழைக்கப்படுகின்றது. ஓரினச் சேக்கையாளரிகளை பாகுபடுத்தி கேலிக்குள்ளாக்கி தீங்குவிளைவிக்கும் சொற்களின் பயன்பாடும் காணலாம். இந்த வார்த்தைகளின் பயன்பாடு பொது மக்களிடையே மட்டுமல்ல, ஊடகங்களிலும் காணப்படுகிறது. ஓரினச் சேக்கையாளரிகள், மாற்றுப்பாலினத்தவரிகளை போலன்றி தமது பாலினம் தொடர்பாக எதுவித சிக்கலும் கொண்டிருப்பதில்லை. மாற்றுப்பால் இனத்து சமூகத்தின் கோரிக்கை என்னவென்றால் அவர்கள் தாம் உள, மன ரீதியாக அடையாளம் காட்டும் பாலினத்தைப் பெற அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதாகும். இந்த வேண்டுகோளில் ஒரு மருத்துவ உட்கூறு உள்ளது. இருப்பினும், ஓரினச்சேர்க்கையாளர்கள், அவர்கள் நேசிக்கும் மற்றும் ஈர்க்கும் நபருடன் இருக்க வேண்டும் என்ற சட்ட மற்றும் சமூக தடைகளை அகற்றும்படி கேட்டுக்கொள்கிறார்கள், அவர்கள் கவரப்பட்டுள்ள மற்றும் விரும்பும் நபர் அதே பாலினத்தவராக இருந்தால் - இலங்கையின் சட்டங்களின் படி, ஓரினச்சேர்க்கை ஒரு குற்றமாகும், இது 1833 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தண்டனை சட்டக் கோவையின் பிரிவு 365 மற்றும் 364(அ) பிரிவுகளால் ஓரினச்சேர்க்கை ஒரு தண்டனைக்குரிய குற்றமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. தண்டனை சட்டக் கோவையில் உள்ள இந்த பிரிவுகள் ஒழுங்காக விளக்கம் பெறாமல் காணப்படுவதனால்,ஓரினச் சேர்க்கையாளர்களை காவல்துறையினர் எவ்வித தடையுமின்றி கைது செய்யவும், தடுத்து நிறுத்துவதற்குமான திறனை பொலிஸார் தக்க வைத்துக் கொண்டுள்ளனர். குற்றவியல் சட்டத்தின் பிரிவு 365(அ) பின்வருமாறு கூறுகிறது:

> "எந்தவொரு நபரும் பொது இடத்திலோ அல்லது தனிப்பட்ட ரீதியிலாகவோ, மற்றோரு நபருடன் மொத்த அநாகரீகத்துடன் செயற்படுகிறாரோ அல்லது செயற்பட முனைகிறாரோ, அத்தகைய நபர் குற்றவாளியாக கருதப்படுவதுடன் அத்தகைய குற்றவாளி, இரண்டு வருடங்கள் வரையான சிறைக் காலமோ அல்லது தண்டப்பணமோ அல்லது இரண்டையுமோ தண்டணையாக மேற்கொள்வதுடன் கசையடியின வழங்கியும் தண்டிக்கப்பட வேண்டும்."

